## பத்திரிக்கைச் செய்தி

## உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்க லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு 4 வருட சிறை தண்டனை விதித்து தீர்ப்பு

மதுரை மாவட்டத்தில் வசித்து வந்த புகார்தாரர் திரு.பெருமாள் தன்னுடைய நிலத்திற்காக கடந்த 2014ம் ஆண்டு நிலத்தினை உட்பிரிவு செய்து பட்டா கேட்டு மதுரை மாவட்டம், நக்கலபட்டி, உசிலம்பட்டி தாலுகா, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். இந்த விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.முனியசாமி, கிராம நிர்வாக அலுவலர், நக்கலபட்டி, உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.1,000/- யை கொடுக்குமாறு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் மதுரை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திரு.முனியசாமி, கிராம நிர்வாக அலுவலர், நக்கலபட்டி, உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம் அவர்கள் மீது புகார் மனு அளித்தார். இதன் பேரில் மதுரை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திரு.முனியசாமி, கிராம நிர்வாக அலுவலர் அவர்களை புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.1,000/-யை பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது மதுரை மாவட்டம் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 29.11.2022 இவ்வழக்கில் குற்றவாளி திரு.முனியசாமி, கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் புகார்தாரரிடம் லஞ்சம் ரூ.1,000/- லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு 3 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.2,000/- அபராதமும், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் பெற்றதற்கு 4 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.2,000/- அபராதமும் விதித்து, இத்தண்டணைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.